# நவராத்திரி மாலை



வெளியீடு :

அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்

பதிவு இல. : HA/4/JA/350

உ

சிவமயம்

# நவராத்திரி மாலை



வெளியீடு :

**அரியாலை இளைஞர் இந்து மாமன்றம்**

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

ஸ்ரீ துர்க்கையை மனதில் நினைத்து "ரோக நிவாரண அஷ்டகம்" எனப்படும் இந்த பாடலைப் பாடுவோருக்கு நோயற்ற சுகமான வாழ்வு அமையும்.

1. பகவதி தேவி பர்வத தேவி
பலமிகு தேவி துர்க் கையளே
ஜெகமது யாவும் ஜெயஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடி டுமே
ஹநஹந தகதக பசபச வெனவே
தளிர்த் திடுஜோதி யான வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

2. தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்கினி தேவி துர்க் கையளே
தந்தன தான தனதன தான
தாண்டவ நடன ஈஸ்வ ரியே
முண்டினி தேவி முனையொளி சூலி
முனிவர்கள் தேவி மணித் தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

3. காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க் கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர்நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

4. நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க் கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசி னியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

5. திருமக ளானாய் கலைமக ளானாய்
மலைமக ளானாய் துர்க் கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி வானாய் பெண் மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கை யளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

6. வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க் கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாய கியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாய வளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

7. கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க் கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சி யளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூர ணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

8. ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்திர கண்டி னியே
ஜெயஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்ய யளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஼ரீநவ துர்க் கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா!

---

# ஸ்ரீ மகாலட்சுமி அர்ச்சனை

108 போற்றி, 108 மகாலட்சுமி பெயர்கள்.

ஸ்ரீ மகாலட்சுமியை மனதில் நினைத்து இவ் 108 மந்திரங்களையும் அர்ச்சிப்பவர்களுக்கு அனைத்து நலங்களும் உண்டாகும்.

1. ஓம் அன்புலட்சுமி போற்றி
2. ஓம் அன்னலட்சுமி போற்றி
3. ஓம் அமிர்தலட்சுமி போற்றி
4. ஓம் அம்சலட்சுமி போற்றி
5. ஓம் அருள்லட்சுமி போற்றி
6. ஓம் அஷ்டலட்சுமி போற்றி
7. ஓம் அழகுலட்சுமி போற்றி
8. ஓம் ஆனந்தலட்சுமி போற்றி
9. ஓம் ஆகமலட்சுமி போற்றி
10. ஓம் ஆதிலட்சுமி போற்றி
11. ஓம் ஆத்மலட்சுமி போற்றி
12. ஓம் ஆளும்லட்சுமி போற்றி
13. ஓம் இஷ்டலட்சுமி போற்றி
14. ஓம் இதயலட்சுமி போற்றி
15. ஓம் இன்பலட்சுமி போற்றி
16. ஓம் ஈகைலட்சுமி போற்றி
17. ஓம் உலகலட்சுமி போற்றி
18. ஓம் உத்தமலட்சுமி போற்றி
19. ஓம் எளியலட்சுமி போற்றி
20. ஓம் ஏகாந்தலட்சுமி போற்றி

21. ஓம் ஒளிலட்சுமி போற்றி
22. ஓம் ஓங்காராலட்சுமி போற்றி
23. ஓம் கருணைலட்சுமி போற்றி
24. ஓம் கனகலட்சுமி போற்றி
25. ஓம் கஜலட்சுமி போற்றி
26. ஓம் கானலட்சுமி போற்றி
27. ஓம் கிரகலட்சுமி போற்றி
28. ஓம் குணலட்சுமி போற்றி
29. ஓம் குங்குமலட்சுமி போற்றி
30. ஓம் குடும்பலட்சுமி போற்றி
31. ஓம் குளிர்லட்சுமி போற்றி
32. ஓம் கம்பீரலட்சுமி போற்றி
33. ஓம் கேசவலட்சுமி போற்றி
34. ஓம் கோவில் லட்சுமி போற்றி
35. ஓம் கோவிந்தலட்சுமி போற்றி
36. ஓம் கோமாதாலட்சுமி போற்றி
37. ஓம் சர்வலட்சுமி போற்றி
38. ஓம் சக்திலட்சுமி போற்றி
39. ஓம் சக்ரலட்சுமி போற்றி
40. ஓம் சத்தியலட்சுமி போற்றி
41. ஓம் சங்குலட்சுமி போற்றி
42. ஓம் சந்தானலட்சுமி போற்றி
43. ஓம் சந்நிதிலட்சுமி போற்றி
44. ஓம் சாந்தலட்சுமி போற்றி
45. ஓம் சிங்காரலட்சுமி போற்றி
46. ஓம் சீவலட்சுமி போற்றி
47. ஓம் சீதாலட்சுமி போற்றி
48. ஓம் சுப்புலட்சுமி போற்றி
49. ஓம் சுந்தரலட்சுமி போற்றி
50. ஓம் சூரியலட்சுமி போற்றி

51. ஓம் செல்வலட்சுமி போற்றி
52. ஓம் செந்தாமரைலட்சுமி போற்றி
53. ஓம் சொர்ணலட்சுமி போற்றி
54. ஓம் சொருபலட்சுமி போற்றி
55. ஓம் சௌந்தர்யலட்சுமி போற்றி
56. ஓம் ஞானலட்சுமி போற்றி
57. ஓம் தங்கலட்சுமி போற்றி
58. ஓம் தனலட்சுமி போற்றி
59. ஓம் தான்யலட்சுமி போற்றி
60. ஓம் திரிபுரலட்சுமி போற்றி
61. ஓம் திருப்புகழ்லட்சுமி போற்றி
62. ஓம் திலகலட்சுமி போற்றி
63. ஓம் தீபலட்சுமி போற்றி
64. ஓம் துளசிலட்சுமி போற்றி
65. ஓம் துர்காலட்சுமி போற்றி
66. ஓம் தூயலட்சுமி போற்றி
67. ஓம் தெய்வலட்சுமி போற்றி
68. ஓம் தேவலட்சுமி போற்றி
69. ஓம் தைரியலட்சுமி போற்றி
70. ஓம் பங்கயலட்சுமி போற்றி
71. ஓம் பாக்யலட்சுமி போற்றி
72. ஓம் பாற்கடல்லட்சுமி போற்றி
73. ஓம் புண்ணியலட்சுமி போற்றி
74. ஓம் பொருள்லட்சுமி போற்றி
75. ஓம் பொன்னிறலட்சுமி போற்றி
76. ஓம் போகலட்சுமி போற்றி
77. ஓம் மங்களலட்சுமி போற்றி
78. ஓம் மகாலட்சுமி போற்றி
79. ஓம் மாதவலட்சுமி போற்றி
80. ஓம் மாதாலட்சுமி போற்றி

81. ஓம் மாங்கல்யலட்சுமி போற்றி
82. ஓம் மாசிலாலட்சுமி போற்றி
83. ஓம் முக்திலட்சுமி போற்றி
84. ஓம் முத்துலட்சுமி போற்றி
85. ஓம் மோகனலட்சுமி போற்றி
86. ஓம் வரம்தரும்லட்சுமி போற்றி
87. ஓம் வரலட்சுமி போற்றி
88. ஓம் வாழும்லட்சுமி போற்றி
89. ஓம் விளக்குலட்சுமி போற்றி
90. ஓம் விஜயலட்சுமி போற்றி
91. ஓம் விஷ்ணுலட்சுமி போற்றி
92. ஓம் வீட்டுலட்சுமி போற்றி
93. ஓம் வீரலட்சுமி போற்றி
94. ஓம் வெற்றிலட்சுமி போற்றி
95. ஓம் வேங்கடலட்சுமி போற்றி
96. ஓம் வைரலட்சுமி போற்றி
97. ஓம் வைகுண்டலட்சுமி போற்றி
98. ஓம் நாராயணலட்சுமி போற்றி
99. ஓம் நாகலட்சுமி போற்றி
100. ஓம் நித்தியலட்சுமி போற்றி
101. ஓம் நீங்காதலட்சுமி போற்றி
102. ஓம் ராமலட்சுமி போற்றி
103. ஓம் ராஜலட்சுமி போற்றி
104. ஓம் ஐஸ்வர்யலட்சுமி போற்றி
105. ஓம் ஜெயலட்சுமி போற்றி
106. ஓம் ஜீவலட்சுமி போற்றி
107. ஓம் ஜோதிலட்சுமி போற்றி
108. ஓம் ஸ்ரீலட்சுமி போற்றி

# சரஸ்வதி துதி

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்திலுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னை
சரியாசனம் வைத்த தாய்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போல்கையுந் – துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லுஞ் சொல்லாதோ கவி

# ஸ்ரீகுமரகுருபர அடிகளார் அருளிய
# சகலகலாவல்லி மாலை

ஸ்ரீகுமரகுருபரர் காசிக்கு தலயாத்திரை சென்று அங்கு மீண்டும் சைவாலயம் அமைத்திட விரும்பினார். அதற்கு காசி உட்பட்ட பிரதேசங்களில் அக்பர் பாதுஷாவின் பிரதிநிதியாக இருந்த தாரா ஷிக்கோ என்பவரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. கொடுங்கோல் ஆட்சி செலுத்திய அவரிடம் அனுமதி பெறுவதென்பது முயற்கொம்பு போன்றது என்று அனைவரும் அறிவுறுத்தியிருந்தனர். எனினும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவரிடம் ஒரு ஹிந்துஸ்தானி மொழிபெயர்ப்பாளருடன் சென்று காசியில் ஆலயம் அமைக்க நிலம் கேட்டபோது ஹிந்துஸ்தானி தெரியாத காரணத்தினால் இவர் அவமதிக்கப்பட்டார். கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது! எனினும், சிந்தை கலங்காது கலைவாணியைத் துதித்து சகலகலாவல்லி மாலை இயற்றிச்சூட்டி ஹிந்துஸ்தானி உருது மொழியாற்றல்களை ஒரேநாளிலேயே கலைவாணியின் பேரருளால் பெற்றுக்கொண்டார்.

தனது தவச்சிறப்பால் சிங்கத்தை தன்வசப்படுத்தி அதன்மேல் அமர்ந்து தாரா ஷிக்கோஷ்யின் அவைக்குச் சென்று தனது கல்வி அறிவினாலே கோரிக்கையை ஹிந்துஸ்தானியில் கேட்டு, ஹிந்துஸ்தானியிலே அவனுடன் சரளமாக உரையாடி நாணச்செய்து அவனிடம் இருந்து சைவாலயம் கட்டவேண்டிய இடத்துக்குரிய அனுமதியை பெற்று காசிமடத்தை கேதாரகட்டத்தில் அமைத்துக்கொண்டார். அங்கு முகமதியர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேதாரலிங்கத்தையும் வெளிப்படுத்தி ஆலயம் அமைத்து தென்னாட்டு ஆகம விதிப்படி நித்திய நைமித்திய பூசைகளையும் செய்வித்தார்.

இவையாவும் கலைவாணியின் அருள்மழையால் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளுக்கு கைகூடியது. எனவே, நாமும் கலைவாணியின் இன்னருளைப் பெற்றிட இவர் இயற்றிய சகலகலாவல்லி மாலையை பக்தியோடு பாடி அர்ச்சிப்போமாக. அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்.

பாடல் – 01.

**வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்**
**தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்**
**துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.**

காக்கும் கடவுளாகிய திருமால், ஊழிக்காலத்தில் ஏழுலகையும் காப்பதற்காக உண்டு, ஆலிலைமேல் துயின்றான். அழிக்கும் கடவுளாகிய சிவபெருமான் பித்தனைப் போல் சுடலையில் ஊழிக் கூத்தாடினான். ஆனால், உயிர்கள் அனைத்தையும் படைக்கும் பிரமன், கலைமகளாகிய உன்னை மனைவியாகப் பெற்று மகிழ்ந்தான். பிரம்மதேவனுக்கு கரும்புபோல் இனிப்பவளே! சகலகலா வல்லியே! உனது திருவடிகளை வெள்ளைநிறத் தாமரையே தாங்கியுள்ளது! எளியேனின் வெண்தாமரை போன்ற மனதினை உனது திருவடிகளை தாங்கும் ஆசனம் ஆக்கிக்கொள்ளக்கூடாதா?

பாடல் – 02.

**நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்**
**பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்**
**கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்**
**காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.**

வெண்தாமரையை ஆசனமாகக் கொண்ட பசும்பொன் கொடி போன்றவளே! குன்றுபோன்ற பெரிய தனங்களை உடையவளே! ஐந்து பகுதிகளாகப் பகுத்து அலங்கரிக்கப்பட்ட காடுபோல் அடர்த்தியான கூந்தலை தாங்கியிருப்பவளே! கரும்பாக இனிப்பவளே! சகலகலாவல்லியே! அறிஞர் நாடி ஆராய்ந்து அறிவதற்குரிய பொருட்சுவையும் சொற்சுவையும் பொருந்திய நான்கு வகைக் கவிதைகளை இடையறாது பாடும் பணிக்கு எளியேனை பணித்து அருள் செய்வாயாக!

பாடல் – 03.

**அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.**

எப்படி மழை பொழிவதை அறிந்து தோகைவிரித்து மயில் ஆடி மகிழ்கின்றதோ அதுபோன்று பல நூல்களையும் கற்றுத் தெளிந்த புலவர்கள் பொழிகின்ற கவிமழையில் களிப்படையும் சகலகலாவல்லியே! எளியேனுக்கு அருளோடு அளித்த செழுமையான தெளிந்த தமிழ் அமுதத்தை சுவைப்பதனூடாக நீ எளியேனுக்கு ஆன்மீக அனுபவத்தைக் கொடுத்து உன் திருவருட்கடலில் மூழ்கி திளைக்கும் அரும்பெரும் பேற்றை அருளுவாயாக!

பாடல் – 04.

**தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்**
**வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்**
**தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று**
**காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.**

கடல் போன்று விரிந்த எண்ணிலாத வடமொழி நூல்களின் கருத்துக்களையும் செழுமை மிகுந்த அருஞ்செல்வமாகிய தமிழ்நூல்களின் கருத்துக்களையும் அடியார்களின் நல்ல நாவினின்று எக்காலத்திலும் நீங்காது காத்து அருளும் கருணைக் கடலே! சகலகலாவல்லியே! அனைவரும் விரும்பும் வண்ணம் சிறப்புடைய பாடல்களை இயற்றும் திறனும் எல்லாத்துறைகளிலும் ஆளுமைதருகின்ற கல்வியும் சொற்சுவை நிரம்பிய வாக்கும் நாள்தோறும் பெருகி வளர்ந்திடு நிலைக்கு எளியேனை ஆளாக்கி அருள்வாயாக!

பாடல் – 05.

**பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்**
**நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்**
**தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்**
**கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.**

திருமாலின் உந்தியில் இருந்து எழுந்த நீண்ட தண்டிடைக் கொண்ட தாமரை மலரில் வீற்றிருப்பவனும் அன்னக்கொடியை உயர்த்திப் பிடித்திருப்பவனுமாகிய நான்முகனின் சிறந்த நாவினையும் மனதினையும் ஆசனமான வெண்தாமரையாக கருதி அங்கு வீற்றிருப்பவளே! சகலகலாவல்லியே! செம்பஞ்சுக் குழம்பினை பூசி அழகுடன் விளங்கும் செம்மையான உனது பொன்னான திருவடிகள், எனது மனமாகிய பொய்கையில் இன்னும் மலராதது ஏன் தானோ? பொய்கைகளில் தாமரை மலர்வது இயல்பு. எனது மனமும் மென்மையாலும் குளிர்மையாலும் நீர்நிலை போல் ஆகிவிட்ட எனது மனமெனும் பொய்கையில் தாமரை என்னும் உனது திருவடிகள் இன்னும் மலராது இருப்பது முறையோ.

பாடல் – 06.

**பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்**
**எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்**
**விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்**
**கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே.**

வானம், நிலம், நீர், நெருப்பு, காற்று என்னும் ஐம்பூதங்களிலும் எழுதாமறையாகிய வேதத்திலும் அடியார்களின் கண்ககளிலும் கருத்திலும் நிறைந்திருப்பவளே! சகலகலாவல்லியே! பண், பரதம், நற்கல்வி, இனிய சொற்களாலான கவிகள் இயற்றும் ஆற்றல் ஆகியனவற்றையெல்லாம் எளியேன் விரும்பும் காலத்தில் எளிதில் அடையும் வண்ணம் திருவருள் பாலிப்பாயாக!

பாடல் – 07.

**பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்**
**கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்**
**தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்**
**காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.**

அடியார்கள் நல்மனதால் எண்ணிப் புனைகின்ற நூல்களில் காணப்படுகின்ற வீடு பேற்றின்பமாகிய பாலையும் உலகியல் இன்பமாகிய நீரையும் தனித்தனியாக பிரித்தறிகின்ற தன்மையை உலக மக்களுக்கு உணர்த்தும் வெண்மையான பெண் அன்னம் போன்றவளே! சகல கலாவல்லியே! பாட்டும் பாட்டுக்குரிய பொருளும் பாடலில் பொருந்தி நிற்கின்ற பயனும் எளியேனிடத்து வந்தடையும் வண்ணம் எளியேனுக்கு கலைமகளே உமது கடைக்கண் பார்வையை அருள்வாயாக!

பாடல் – 08.

**சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல**
**நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்**
**செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்**
**கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.**

செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளின் அருள் நமக்கு வாய்க்கப்பெறவில்லையே என்று வருந்துகின்ற நிலை எக்காலத்திலும் ஏற்படாவண்ணம் காலத்தால் அழியாத கல்வி என்னும் பெரும் செல்வத்தை தந்து அருள்பவளே! சகல கலாவல்லியே! சொல்வன்மையும், கூர்ந்து கவனிக்கின்ற ஆற்றலும் சிறப்புமுடைய கவிதைகளை பாடக்கூடிய வல்லமையும் (வித்தகம்) எளியேனுக்கு அருளி எளியேனை உனது அடிமையாக்கி கொள்வாயாக!

பாடல் – 09.

**சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ் ஞானத்தின் தோற்றம்என்ன**
**நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலம் தோய்புழைக்கை**
**நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்னம் நாணநடை**
**கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.**

நிலத்தை தொடும்படி உடைய நீண்ட துதிக்கையை உடைய நல்ல பெண் யானையும் அரச அன்னமும் நாணும்படி அழகாக நடைபயிலுகின்ற தாமரைபோன்ற திருவடிகளை உடையவளே! சகலகலாவல்லியே! சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராக விளங்குகின்ற மெஞ்ஞானவடிவமாக தோன்றி நிற்கின்ற உன்னை நினைத்து உணர்ந்து கொள்ளும் பக்குவம் பெற்றவர்கள் யாரும் இல்லை! அவ்வாறான பக்குவ ஆற்றலை எளியேனுக்கு அருள்வாயாக!

பாடல் – 10.

**மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்**
**பண்கண்ட அளவில் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்**
**விண்கண்ட தெய்வம்பல் கோடிஉண் டேனும் விளம்பில்உன்போல்**
**கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே.**

விண்ணுலகத்திலே சிறப்புடைய தெய்வங்கள் பலகோடி இருந்தாலும் உன்னைப்போன்று கண்கண்ட தெய்வம் வேறு இல்லை என்று தெளிந்து கூறும்படியாக விளங்குபவளே! சகலகலாவல்லியே! மண்ணுலகம் முழுவதையும் தன் வெண் கொற்றக்குடையின் கீழ் கொண்டு ஆட்சிசெய்யும் மன்னரும் எளியேனின் இனிய தமிழ்ப் பாடலைக் கேட்ட மாத்திரத்தில் அடியேனை விரைந்து பணிந்து வணங்க அருள்செய்வாயாக!

அனுசரணை:

**செல்வி. லக்ஷியா தியாகசீலன் (இங்கிலாந்து)**

**செல்வன். லக்ஷன் தியாகசீலன் (இங்கிலாந்து)**

29.09.2019

மெகா பதிப்பகம் 021 221 7939